அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 12

மாதிரித் தேர்வுத்தாள்

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: சனிக்கிழமை** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

மாதிரிக் கேள்வித்தாள்

# பகுதி 1- எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. தமிழ்மொழி அகரமுதலியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
   1. வீரமாமுனிவர்
   2. பி.யு.போப்
   3. கார்டுவெல்
   4. அல்பேட் சுவைட்சர்

2. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று
   1. நற்றிணை
   2. பதிற்றுப்பத்து
   3. மலைபடுகடாம்
   4. குறவஞ்சி

3. உவமைத்தொகைக்குப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக அமைவது
   1. துடியிடை வந்தாள்
   2. கருங்குழல் வந்தாள்
   3. பூங்குழல் வந்தாள்
   4. தாழ்குழல் வந்தாள்

4. நன்னூல் எனும் இலக்கணநூலை எழுதியவர்
   1. தொல்காப்பியர்
   2. சேனாவரையர்
   3. பவணந்திமுனிவர்
   4. குணவீரபண்டிதர்

5. சொல்லியத்தின் பயனிலையோடு யாரை, எதை என வினவ வரும் உறுப்பு
   1. எழுவாய்
   2. பயனிலை
   3. அடைமொழி
   4. செயப்படுபொருள்

6. 'என் கணவனோ கள்வன்' இதில் வந்துள்ள ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்
   1. எதிர்மறை
   2. தெரிநிலை
   3. இழிவு
   4. பிரிநிலை

7. ஆரியர்கள், மூவேந்தர்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையைத் தகர்த்தனர். இதில் ஒற்றுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. பகைமை
   2. வேற்றுமை
   3. மெய்ம்மை
   4. அறிவின்மை

8. என் கல்லறையில் "இங்கு ஒரு தமிழ்மாணவன் உறங்குகிறான் என எழுதுங்கள்" எனக் கூறியவர்
   1. கார்ல் மார்க்சு
   2. வீரமாமுனிவர்
   3. யி.யு.போப்
   4. இராபர்ட் டி. நொபிலி

1 2 3 4

9. பிழையற்ற சொல்லியம்
   1. வயலில் மாடுகள் மேய்ந்தது
   2. வயலில் மாடுகள் மேஞ்சது
   3. வயலில் மாடுகள் மேய்ந்தன
   4. வயலில் மாடுகள் மேந்தன

10. தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடியென அழைக்கப்படுவது
    1. பஞ்சதந்திரக்கதைகள்
    2. பிரதாபிமுதலியார்சரித்திரம்
    3. தேம்பாவணி
    4. பொன்னியின் செல்வன்

11. 'படி' என்ற வேர்ச்சொல்லிலிருந்து வந்துள்ள வினையாலணையும் பெயர்
    1. படித்த
    2. படித்து
    3. படித்தான்
    4. படித்தவன்

12. யாப்பிலக்கணத்துக்கு உட்பட்டு எழுதப்படும் கவிதை
    1. மரபுக்கவிதை
    2. புதுக்கவிதை
    3. கைக்கூகவிதை
    4. சென்றியூகவிதை

13. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கைச் சொல்லாக அமைவது
    1. வந்தன
    2. வந்தீர்கள்
    3. வந்தார்கள்
    4. வந்தோம்

14. இராசராசசோழன் என அழைக்கப்படுபவரின் தமிழ்ப்பெயர்
    1. அருண்மொழித்தேவன்
    2. புலித்தேவன்
    3. திரிகூடராசப்பர்
    4. வீரராகவர்

15. பழந்தமிழரின் வீரத்துக்குச் சான்றாக விளங்குபவை
    1. நடுகற்கள்
    2. நாணயங்கள்
    3. கோவில்கள்
    4. அகநூல்கள்

16. உரைநடைப் பாவுக்கு வித்திட்டவர்
    1. பாரதிதாசன்
    2. சுத்தானந்தபாரதியார்
    3. மகாகவி பாரதியார்
    4. சோமசுந்தரபாரதியார்

17. கொலுசு என்ற தெலுங்குமொழிச் சொல்லுக்கான தமிழ்ச்சொல்
    1. காற்சிலம்பு
    2. வளையல்
    3. ஆரம்
    4. மெட்டி

**1 2 3 4**

18. தவப்பெருஞ் செயலாக உயிர்தந்த மாவீரன். இதில் தவ எனும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்
    1. விரைவு
    2. காவல்
    3. புதுமை
    4. மிகுந்த

19. வாக்கியம் என்னும் வடமொழிச் சொல்லின் தமிழ்ச்சொல்
    1. சொல்
    2. கிளவி
    3. சொல்லியம்
    4. பதம்

20. பழந்தமிழரின் புறத்திணை வாழ்வியலில் பேணப்பட்டது
    1. போரறம்
    2. காதல்
    3. களவு
    4. விருந்தோம்பல்

21. வடமொழி தமிழோடு அளவின்றிக் கலந்த காலம்
    1. களப்பிரர்
    2. பல்லவர்
    3. சோழர்
    4. சங்ககாலம்

22. இன்றைய ஈரான், ஈராக், ஆப்கானித்தான் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது
    1. மொகஞ்சதாரோ
    2. கரப்பா
    3. சுமேரியா
    4. மோசப்பத்தேமியா

23. புற்றரை என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. புல் + தரை
    2. புற் + றரை
    3. புற் + தரை
    4. புல் + றரை

24. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் பெற்றுள்ள சொல்
    1. அலகு
    2. ஆடு
    3. கதவு
    4. பஞ்சு

25. புதுக்கவிதையைப் படித்து விளங்கிக்கொள்வது எளிது. இதில் எளிது என்பது
    1. அரிது
    2. சிறிது
    3. பெரிது
    4. இலகு

(25×1=25 புள்ளிகள்)

பாரதிநேர்வத்தாள

**2. கீழ்க்காணும் வினாக்களுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளுள் இரண்டினை எழுதுக.

2. இருபதாம் நூற்றாண்டில் கவிதை இலக்கிய வடிவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு எழுதுக.

3. சிந்துவெளி நாகரிக மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறிருந்தது?

4. ஈழத்துப் புதுக்கவிதைக் கவிதைக் கவிஞர்கள் நால்வரின் பெயர்களை எழுதுக.

5. தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்களுள் இரண்டினைத் தந்து, அவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

6. 'குற்றியலுகரத்தின் முன் மெய் புணர்தல்' இதற்கான எடுத்துக்காட்டுகள் இரண்டு எழுதுக.

7. "நாங்கள் வாழ்வில் முன்னேறவேண்டும்" என்று ஆசிரியர் எங்களுக்கு அறிவுரை வழங்கினார். இச்சொல்லியத்தின் தலைமைத்தொடர், சார்புத்தொடர் என்பவற்றை எழுதுக.

(5×2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**3. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. வீரம்

2. 

(4 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**4. கீழ்க்காணும் பந்தியை வாசித்து மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

தமிழ்மொழி அறிவியல் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஊடகத்துறையிலும் செல்வாக்குப்பெற்றுள்ளது. அறிவியல், தொழில்நுட்பத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியில் ஒன்றாக இணையம் தோற்றம்பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாகக் குமுக வலைத்தளங்கள் வலுவான ஊடகங்களாகச் செயற்படுகின்றன. வேறு மொழிகளிலுள்ள அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த செய்திகளைப் பலர், எளிய தமிழில் மொழிபெயர்க்க முற்படுகின்றனர். அத்துடன், அவர்கள், தமது தனிப்பட்ட கருத்துகளையும் பதிவேற்றம்செய்ய முனைகின்றனர். இதனால், தமிழ்மொழிப் பயன்பாடு விரிவடைகிறது. எனினும், விரைவான செயற்பாடுகள், பொறுப்பற்ற போக்குகள் போன்றவற்றால் மொழி சிதைக்கப்படும் நிலையும் இன்று உருவாகியுள்ளது. நடுநிலையான வணிக நோக்கற்ற ஊடகங்களில் வருகின்ற செய்திகள், நிகழ்வுகளை விட வணிக நோக்கிலான ஊடகங்களின் நிகழ்வுகளே இன்று மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவருகின்றன.

(4 புள்ளிகள்)

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

மாதிரித் தேர்வுத்தாள்

**5. கீழ்க்காணும் பந்தியை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

ஆதி மொழிகளாக விளங்கிய எபிரேயமொழி, கிரேக்கமொழி, இலத்தீன் மொழி, வடமொழி என்பன இன்று பேச்சுவழக்கில் இல்லை. ஆனால், சீனமொழி இன்றும் சிறப்புடன் வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. இந்தியாவில் சமசுகிருதம், பார்சி, அரபு, தமிழ் என்பன மட்டுமே செம்மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன. இன்று உலகில் பேசப்படும் மொழிகளை மூன்றாக வகைப்படுத்தலாம். எழுத்தின்றி, பேசமட்டும் முடிந்த மொழிகள், உரோமன் எழுத்துகளால் எழுதப்பட்டுப் பேசும் மொழிகள், தனித்துவமான எழுத்துகளைக் கொண்டு பேசப்படும் மொழிகள் என்பனவே அவையாகும். இந்த மூன்றாவது வகைக்குள் எம் தாய்மொழியாகிய தமிழ்மொழியும் அடங்கிச் சிறப்புப் பெறுகிறது.

(4புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் பொருளுரையை எழுதுக.**

அது ஒரு கொடும் வெயில் நாள் ஆறுகள் வற்றினவே!
கொதிதணல் எனும் வெயிலின் கொடுமைகள் முற்றினவே!
விதி இதுவென அவர்கள் வீழ்ந்து கிடந்திலரே!
எதுவரை எனினும் அவர்கள் எழுந்து நடந்தனரே!

எம்.ஏ.நு்.மான்

(3 புள்ளிகள்)

மாகாணத் தேர்வுத்தாள்

**7. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கமும் அதன் வளர்ச்சியும்
2. மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்
3. தமிழர் வாழ்வும் மரபுகளும்

உள்ளடக்கக் குறிப்புகள்:

- தமிழர்களின் மரபுவழி வாழ்வியல் முறைகள்
- அவை சொல்லும் செய்திகள்
- அறிவியல் வளர்ச்சியின் பின்பும் மரபுகள் மாறாதிருத்தல்
- வாழ்வை வளப்படுத்த உதவும் மரபுகள்

(15 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் கேள்வித்தாள்

## பகுதி – 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பண்டைத்தமிழர் குடும்பவாழ்வுபற்றி மிகவும் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அறம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியன்று. வாழ்வு முற்றுமே அறமாகும். எனவேதான், குடும்ப வாழ்க்கையை இல்லறம் என்றனர். மெல்லமெல்லத் தன் உள்ளம் விரிந்து தன்மனைவி, தன்பிள்ளை, தன்சுற்றம் எனும் எல்லைகளைக் கடந்து, அனைத்துயிர்களுக்கும் அருள்செய்யும் மனநிலையை அடைவதே வாழ்வின் நோக்கம். அம் மனநிலையைப் பெறும் பள்ளியே இல்லறம் என்றனர். இல்வாழ்வான் என்பவன் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் அனைவரையும் போற்றும் கடமையுடையான் என்றும், அறநெறியின்படி இல்வாழ்வை நடத்தினால் துறவறமே தேவையில்லை என்றும் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். சங்க இலக்கியங்களுள்ளும் இல்லறச் செந்நெறிகள் பலவும் பரந்து கிடக்கின்றன. சங்க நாளில் பெரிதும் போற்றப்பட்ட அறங்களுள் பேரறமாக விளங்குவது விருந்தோம்பலாகும். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறுகையில் விருந்தோம்பற் பண்பாட்டையும் சேர்த்துக் கூறுகிறார். சோழர் காலத்தில் கலிங்கத்துப்பரணியைப் பாடிய செயங்கொண்டார் இறந்த வீரர்களைக் கழுகுகளும் பருந்துகளும் கொத்தியுண்டபோதும் முகமலர்ந்து கிடந்தனர் என ஒருபாடல் மூலம் பாடியுள்ளார். இதுவும் தமிழரின் விருந்தோம்பற் பண்பையே காட்டுவதாக உள்ளது. இவ்வாறு குடும்பவாழ்வு குமுகாய நன்மைக்காக மனிதன் நடத்தவேண்டிய தொண்டு வாழ்வாகக் கருதப்பட்டது. அன்பும் உழைப்பும், வறுமையிற் செம்மையும் அன்றைய குடும்பத்தின் அடித்தளமாக விளங்கின.

1. பண்டைத்தமிழர் அறத்திற்கு எவ்வாறு முதன்மை அளித்தனர்? (1 புள்ளி)

   __________________________________________

2. எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்பவனுக்குத் துறவறம் தேவையில்லை எனக் கூறப்பட்டுள்ளது? (1 புள்ளி)

   __________________________________________

3. பெண்ணின் இலக்கணம் கூறும்போது தொல்காப்பியர் எதனைச் சேர்த்துக் கூறுகிறார்? (1 புள்ளி)

   __________________________________________

மாதிரித் தொகுப்பு

4. செயங்கொண்டாரின் பாடல் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? (1 புள்ளி)

5. அன்றைய குடும்பத்தின் அடித்தளமாக விளங்கியவை எவை? (1 புள்ளி)

6. வாழ்வின் நோக்கம் எதுவெனக் கூறப்பட்டுள்ளது? (2 புள்ளிகள்)

7. ‘தமிழர் வாழ்வில் இன்றும் அறம் போற்றப்படுகிறது.’ இக்கூற்றுப் பற்றிய உமது கருத்தை எழுதுக. (2 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**2. கீழ்க்காணும் பந்திகளுக்குப் பொருத்தமான தலைப்புகளைத் தெரிவுசெய்து எழுதுக.**

**தலைப்புகள்:**

- வானிலை ஆய்வுமைய அறிவிப்பு
- பெண்களுக்கான ஓவியப்போட்டி
- பெண்கள் வாழ்வியல் தொடர்பிலான ஓவியக்கண்காட்சி
- வானிலை அவதான நிலைய எச்சரிக்கை

1. ______________________________

காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முதல் இடைவிடாமல் விடிய விடிய காற்றுடன் மழை பெய்து வருகிறது. இரவு முழுக்க பெய்த மழையால் யாழ் மாநகர் முழுவதும் உள்ள பல்வேறு சாலைகள் வெள்ளத்தில் மூழ்கின. கனமழை காரணமாக மலைநாட்டில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அதிகாலை முதல் நாடு முழுவதும் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

2. ______________________________

நாட்டில் தற்போது காணப்படும் சீரற்ற காலநிலை சில நாள்களுக்கு நீடிக்கும் எனவும் கரையோரப்பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் காலநிலை அவதானமையம் தெரிவித்துள்ளது. அதேவேளை மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 40 – 50 கிலோமீற்றர் வரை காணப்படும். அவ்வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

3. ______________________________

விபுலானந்த கலைக்கூடத்தில் நடைபெற்ற ஓவியக்கண்காட்சி பிரபல ஓவியர் கீரன் தொடக்கி வைத்தார். இவ்வோவியக் காட்சியில் பெண் சுதந்திரம், பெண்களின் தனித்தன்மை, பெண்களின் மனநிலை என அனைத்தும் பெண்களின் வாழ்க்கை நிலைகளை வெளிப்படுத்தும் வகையில் வரையப்பட்டிருந்த ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வோவியக்கண்காட்சி ஓவியர்கள் மற்றும் ஓவிய ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. காட்சியில் இடம்பெற்ற ஓவியங்கள் அனைத்தும் ஓவியர் நந்தினியின் கைவண்ணத்தில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

(3×2=6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 03 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்